பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

*14 10 2025 TUESDAY* *6.30 PM*

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் அமையவுள்ள செயற்கை நுண்ணறிவு மையம் நாட்டின் டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு உத்வேகம் அளிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- வீடுகளுக்கு நேரடியாக டெலிவரி செய்யும் ரயில்வே பார்சல் சேவையை அத்துறைக்கான அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் இன்று புதுதில்லியில் தொடங்கிவைத்தார்.
- தமிழகத்தில் மாம்பழ ஏற்றுமதி மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களின் உற்பத்தியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசை, முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.
- தமிழகம், புதுச்சேரியின் அநேக இடங்களில் அடுத்த ஐந்து நாட்களுக்கு பரவலாக மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- அமெரிக்க சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Dakshineshwar Suresh* காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் அமையவுள்ள செயற்கை நுண்ணறிவு மையம் நாட்டின் டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு உத்வேகம் அளிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்நிறுவனத்தின் புதிய முயற்சி இந்தியாவை தொழில்நுட்ப ரீதியாக உயர்ந்த இடத்திற்கு கொண்டு செல்லும் என்று கூறியுள்ளார்.

நாட்டு மக்களுக்கு தேவையான மின்னணு சேவையை பூர்த்தி செய்வதில் இந்த மையம் முக்கிய பங்காற்றும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மையத்தின் கட்டமைப்பை ஜிகாவாட் அளவில் விரிவுபடுத்தப் போவதாக கூகுள் தலைமை செயல் அதிகாரி திரு சுந்தர் பிச்சை அறிவித்துள்ளது வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு

பேருதவியாக இருக்கும் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நிகழ்ச்சியில் பேசிய மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசின் கொள்கைகள் மற்றும் செயல்திட்டங்கள், இந்த திட்டத்தை சாத்தியமாக்கியிருப்பதாக கூறினார்.

புதுதில்லியில் இன்று பாரத செயற்கை நுண்ணறிவு சக்தி என்ற நிகழ்ச்சியில் பேசிய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், கூகுள் நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவு மையம், நாட்டில் செயற்கை நுண்ணறிவு இயக்கத்திற்கு வலுசேர்க்கும் என்று தெரிவித்துள்ளார்.

அடுத்த ஐந்தாண்டுகளில் 15 பில்லியன் டாலர் அளவுக்கு இந்நிறுவனத்தில் முதலீடு செய்யப்போவதாக கூகுள் நிறுவனம் அறிவித்துள்ளதை வரவேற்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த புதிய மையத்தின் செயல்பாட்டை மேம்படுத்தும் வகையில், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு பயிற்சி அளித்து அவர்களது செயல்திறனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கூகுள் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாட்டில் உள்ள இளைஞர்களின் செயல் திறனை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>

வீடுகளுக்கு நேரடியாக டெலிவரி செய்யும் ரயில்வே பார்சல் சேவையை அத்துறைக்கான அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் இன்று புதுதில்லியில் தொடங்கிவைத்தார்.

இந்த சேவை குறித்து செய்தியாளர்களிடம் தெரிவித்த திரு அஷ்வினி வைஷ்ணவ், தில்லி - கொல்கத்தா மற்றும் மும்பை – கொல்கத்தா ஆகிய இடங்களுக்கு இதற்கென மூன்று பிரத்யேக ரயில் பெட்டிகள் ரயில்களில் இணைக்கப்பட உள்ளதாக கூறினார்.

இந்த சேவையின் மூலம் பார்சல்கள் பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்பட்டு, குறித்த நேரத்தில், குறித்த முகவரியில் டெலிவரி செய்யும் பணியையும் ரயில்வே நிர்வாகம் மேற்கொள்ளும் என்று தெரிவித்தார்.

இந்த சேவை மக்களுக்கு இன்றியமையாதது என்று கூறிய திரு அஷ்வினி வைஷ்ணவ், குறைந்த செலவில் பொருட்களை கொண்டு செல்வதற்கு இந்த சேவை பேருதவியாக இருக்கும் என்று கூறினார்.

<<<<<>>>>>

தமிழக மா விவசாயிகளின் நலன்கருதி, மாம்பழ ஏற்றுமதி மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களின் உற்பத்தியை மேம்படுத்த

நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசை, முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில், மாம்பழக்கூழ் தயாரிப்பு நிறுவனங்கள் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் விதிகளை பின்பற்றுவதை உறுதி செய்யுமாறு வலியுறுத்தியுள்ளார்.

விதிகளை பின்பற்றாமல் பேக்கேஜ் செய்யப்பட்ட மாம்பழச்சாறு உற்பத்தி செய்யப்படுவதால், மா விவசாயிகள் மற்றும் மாம்பழம் பதப்படுத்துவோர் பாதிப்புக்கு உள்ளாவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நுகர்வோர் நலனை கருத்தில்கோண்டு 18 முதல் 20 சதவீதம் வரை பழக்கூழ் உள்ளடக்கத்தை உறுதி செய்ய மத்திய அரசு சார்பில், உரிய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் முதலமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

மாம்பழக்கூழ் ஏற்றுமதிக்கான உள்கட்டமைப்பை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்குமாறும் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் இவ்வாண்டு மே மாதம் தொடக்கக்கல்வி பட்டயத் தேர்வு எழுதிய ஆசிரியர் பயிற்சி மாணவர்களின் தேர்வு முடிவுகள் நாளை வெளியிடப்படும் என்று அரசு தேர்வுகள் இயக்ககம் அறிவித்துள்ளது.

தேர்வு எழுதியோர் தங்களது விடைத்தாள்களை ஒளி நகல் பெற விரும்பினால், இம்மாதம் 17-ஆம் தேதிமுதல், 22-ஆம் தேதிவரை உரிய கட்டணத்தை செலுத்தி விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை அரசு தேர்வுகள் இயக்ககத்தின் dge.tn.gov.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பித்து தங்களது விடைத்தாள்களின் ஒளி நகலை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகம், புதுச்சேரியின் அநேக இடங்களில் அடுத்த ஐந்து நாட்களுக்கு பரவலாக மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

*(Sound Byte – செந்தாமரை கண்ணன் - 32 Sec.)*

இதனிடையே, அரபிக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகக்கூடும் என்றும் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்தார்.

*(Sound Byte – செந்தாமரை கண்ணன் - 23 Sec.)*

இதனிடையே, சேலம், தென்காசி, விருதுநகர் மாவட்டம் சிவகாசி உள்ளிட்ட பகுதிகளில் இன்று கனமழை பெய்ததாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

<<<<<>>>>>

பிரதமரின் தொழில்பழகுநர் பயிற்சி திட்டத்தின்மூலம் நாடு முழுவதிலும் தொழிற்பயிற்சி முடித்த இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்களுக்கான வேலைவாய்ப்பும் உறுதி செய்யப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டத்தில் இந்த திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதில் பயிற்சி பெற்ற இளைஞர்கள், தங்களது செயல்திறன் மேம்படுத்தப்பட்டுள்ளதாகவும், புதிய வேலைவாய்ப்புக்கான நம்பிக்கை கிடைத்திருப்பதாகவும் எமது செய்தியாளிடம் தெரிவித்தனர்.

(Voice Byte – மாணவர்கள் – 32 Sec. )

<<<<<>>>>>

## மாவட்டச் செய்திகள்

சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு வணிக கடன் வழங்கும் சிறப்பு முகாமை மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் இன்று தொடங்கிவைத்தார்.

----------------

சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் நோக்கில், திறன்மிகு தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரங்களின் பயன்பாட்டை மேயர் திருமதி பிரியா இன்று தொடங்கிவைத்தார்.

--------------

திருப்பத்தூர் மாவட்டம் எஸ். கோடியூர் பகுதியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமில் ஆட்சியர் திருமதி சிவ சௌந்தரவல்லி பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

-----------

சிவகங்கை மாவட்டம் வேட்டங்குடிபட்டி பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள கண்மாய் கரைகளில் 4 ஆயிரம் பனை விதை நடும் திட்டத்தை ஆட்சியர் திருமதி பொற்கொடி தொடங்கிவைத்தார்.

-----------

திருவாரூர் மாவட்டம் வடுவூர் கோதண்டராமர் கோவிலில் லட்ச்சார்ச்சனை இன்று நடத்தப்பட்டது.

<<<<<>>>>>

## விளையாட்டுச் செய்திகள்

*அமெரிக்க சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Dakshineshwar Suresh காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 6-4, 6-4 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் Alex Rybakov -வை வென்றார்.*

------------

*உலக ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் தன்வி ஷர்மா மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*குவஹாத்தியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் அவர் 15-2, 15-1 என்ற செட் கணக்கில், போலந்தின் Wiktoria -வை வென்றார்.*

*<<<<<END>>>>*